# இலங்கை மட்பாண்டக் கைத்தொழில் கூட்டுத்தாபனம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை மட்பாண்டக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

2012 சனவரி 01 ஆம் திகதி முதல் அமுலாகும் புதிய இலங்கை கணக்கீட்டு நியமத்தை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 யூலை முதல் 2012 மார்ச் வரையான காலப்பகுதிக்கு உரித்தான கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட வேண்டியிருந்த ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத் தொகையான ரூபா 44,876,863 தொகை அரசாங்க வள முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் இது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேவையிலிருந்து ஓய்வுபெற்ற 497 ஊழியர்களுக்காக கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகை, நிலுவைச் சம்பளம், நிலுவை வாழ்க்கைச் செலவினப் படி மற்றும் சுயவிருப்பில் ஓய்வூதியம் செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத்தொகையான ரூபா 326,936,590 தொகை அரசாங்க வள

முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) எஞ்சியுள்ள 43 ஊழியர்களுக்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 5,755,597 ஆகக் காணப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 69,859,212 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் படி ரூபா 64,103,615 தொகையான மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பழுதடைந்த இருப்பான ரூபா 3,672,362 இற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 182,739 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) வருமானக் கூற்றில் வேறு வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்கு உரித்தான நிலையான வைப்புவட்டி வருமானமும் பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானமும் ரூபா 169,828 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கு உரித்தான ஆண்டின் இறுதிப் பொருள் மெய்மையாய்வின் போது ரூபா 1,421,951 தொகையான இருப்பு மிகையும் ரூபா 63,169 தொகையான இருப்புப் பற்றாக்குறையொன்றும் நிலவிய போதிலும் இதற்கான சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2002 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்த பங்கதெனிய தொழிற்சாலைக்கு உரித்தான ரூபா 744,166 ஆன இருப்பும் 25 ஆண்டுகளுக்கு முன்னர் மூடப்பட்டிருந்த ஒட்டிசுட்டான் தொழிற்சாலைக்கு உரித்தான ரூபா 1,006,483 தொகையான இருப்பும் நிதிக்கூற்றுக்களின் இறுதி இருப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,345,063 பெறுமதியான 24 வாகனங்கள் பௌதீக ரீதியாக கூட்டுத்தாபன வளாகத்தில் காணப்படாததுடன் கூட்டுத்தாபனத்தின் பயன்பாட்டில் உள்ள 13

வாகனங்களின் பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டிலும் நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 ஆம் ஆண்டின் போது மூடப்பட்ட ஓர் கம்பனிக்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார கடன்பட்டோர் மற்றும் வியாபாரக் கடன்கொடுத்தோராக முறையே ரூபா 22,375,918 தொகையும் ரூபா 48,602,070 தொகையுமான மீதிகள் காணப்பட்ட போதிலும் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மஹியங்கனை தொழிற்சாலையில் 2009 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் தீர்க்கப்படாத ரூபா 220,463 தொகையான நீர்ப் பட்டியல்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பங்கதெனியா தொழிற்சாலை

(i) மேற்குறித்த தொழிற்சாலை 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மூடப்பட்டிருந்த போதிலும் முன்கொண்டு வரப்பட்டிருந்த வியாபார கடன்பட்டோர் மீதியான ரூபா 314,360 தொகையும் செலுத்தப்பட வேண்டிய மின்சாரமான ரூபா 1,058,182 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2008 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் பாதுகாப்பு வரி, புரள்வு வரி, பெறுமதி சேர் வரி மற்றும் பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியாக ரூபா 13,363,261 கூட்டுத்தொகையானது வேறு கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றைத் தீர்ப்பதற்கு 2013 செப்தெம்பர் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 25 ஆண்டு காலமாக நிலவி வரும் ஒட்டிசுட்டான் தொழிற்சாலைக்கு உரித்தான ரூபா 167,222 தொகையான வியாபார கடன்பட்டோர்

மீதியும் அறவிடப்பட வேண்டிய ரூபா 262,167 தொகையான விழா முற்பணத் தொகையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அலயாபத்துவ தொழிற்சாலைக்கு 2008 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே தனியார் நிறுவகம் ஒன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 844,622 தொகை 2013 செப்தெம்பர் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான எழுத்து மூலச்சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் போது தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்டிருந்த ரூபா 3,129,246 தொகைக்காக உரிய பயன்பாட்டு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அச் செலவினங்களை கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3 ஆம் பந்தி | 50,000 | புரோடஸ் திசேரா ஞாபகார்த்தத்திற்காக மீளாய்வாண்டின் போது புத்தளம் மாவட்ட மன்றத்திற்கு ரூபா 50,000 தொகையான அன்பளிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டம் | 5,056,579 | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் | 55,809,968 | |
| (ஈ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டண அதிகாரச்சட்டம் | 11,002,254 | நீண்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டு வரும் ரூபா 171,994,557 கூட்டுத்தொகையான வரித் தொகை 2012 திசெம்பர் 31 வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1995 இன் 36 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு வரி அதிகாரச்சட்டம் | 38,406,286 | |
| (ஊ) | 1996 இன் 34 ஆம் இலக்க பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி அதிகாரச்சட்டம் | 59,488,624 | |
| (எ) | 2006 இன் 10 ஆம் இலக்க வருமான வரி அதிகாரச்சட்டம் | 2,230,846 | |
| (ஏ) | 1990 இன் 6 ஆம் இலக்க மேல்மாகாண சபையின் நிதி விதி | 5,583,755 | மேல்மாகாண வருமான ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 5,585,755 தொகையான விற்பனைப் புரள்வு வரி 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,149,861 தொகையான மிகையானதுடன் அதற்கு மாறாக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 104,172,501 ஆகக் காணப்பட்டது. இதற்கமைய மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 109,322,362 தொகையான கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தின் ஏனைய வருமானம் உயர்வடைவதற்கு முக்கியமாக மஹியங்கனை மற்றும் பங்கதெனியா தொழிற்சாலையில் கைக்கெட்டியவைகள் விற்பனையால் கிடைக்கப்பெற்ற ரூபா 10,608,298 தொகையான வருமானம் தாக்கமளித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் ஊழியர்களில் 497 பேர் சேவையிலிருந்து ஓய்வடைந்து துண்டு அடிப்படையில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த காரணத்தால் விற்பனைக் கிரயமும் மொத்தச் செலவினமும் முறையே 50 சதவீதத்தாலும் 41 சதவீதத்தாலும் குறைவடைவதற்குத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனம் 2011 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நட்டத்தை அடைந்திருந்த போதிலும் 2012 ஆம்ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மீளமைப்புக் காரணமாக இலாபத்தை அடைந்து வருவது அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|---|---|---|
| இலாபம்/ (நட்டம்) (ரூபா மில்லியன்) | 5.1 | (104.2) | (77.3) | (63) | (42.9) | (20.4) |

## 2.3 நிதி விகித பகுப்பாய்வு

| | 2012 | 2011 | அவதானிப்புகள் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| | ------- | ------- | --------------------- |
| நடைமுறை விகிதம் | 0.30 | 0.26 | பாதுகாப்பான நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை விகிதம் 2:1 ஆக இருத்தல் வேண்டும். |
| கடன் விகிதம் | 2.66 | 3.12 | வியாபார நிறுவனம் ஒன்றில் நிலவ வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட மொத்தச் சொத்துக்களுக்கு வெளிக் கடன் விகிதம் 1:1 ஆக இருத்தல் வேண்டும். மிகை திரவத்தன்மை விகிதாசாரத்தில் காண்பிக்கப்படுவதால் கூட்டுத்தாபனத்தின் நிலைப்பாட்டிற்கு பாதகமாக தாக்கமளிக்காது என்பதைத் தவிர்க்க முடியாதுள்ளது. |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் | 1.43 | 4.01 | கடன்பட்டோரிடமிருந்து பணத்தை அறவிடும் காலம் 91 நாட்கள் முதல் 255 நாட்கள் வரை அதிகரித்திருந்தது. |
| கடன்பட்டோர் புரள்வு நாட்களின் எண்ணிக்கை | 255 நாட்கள் | 91 நாட்கள் | |
| இருப்பு புரள்வு விகிதம் | 4.04 | 4.73 | உற்பத்தி இருப்பை விற்பனைகளாக்குவதற்கான காலம் 77 நாட்கள் முதல் 90 வரை அதிகரித்திருந்தது. |
| இருப்பு புரள்வு நாட்களின் எண்ணிக்கை | 90 நாட்கள் | 77 நாட்கள் | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 3.1 செயலாற்றல்

------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் 07 ஓட்டுத் தொழிற்சாலைகள் காணப்படுவதுடன் மீளாய்வாண்டில் இவற்றில் 05 தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்கியிருந்தன. கடந்த 5 ஆண்டுகளில் அவற்றின் இலாப நட்ட நிலைமை வருமாறு.

| **ஓட்டுத் தொழிற்சாலை** | **ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்)** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2010** | **2009** | **2008** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| வேஉட | (1,989,600) | (11,061,586) | (11,063,102) | (18,592,538) | (18,451,900) |
| எலயாபத்துவ | (12,068,069) | (29,414,618) | (20,687,770) | (25,454,863) | (18,522,562) |
| பிங்கிரிய | (1,711,014) | (6,837,118) | (7,468,051) | (7,387,301) | (5,655,707) |
| மஹியங்கனை | 3,978,017 | (20,981,620) | (15,457,782) | (12,389,294) | (14,104,148) |
| யடியன | (4,751,744) | (14,382,036) | (12,071,994) | 12,260,587 | (11,365,675) |
| உஸ்வெவ | (8,985,412) | (17,127,924) | (13,800,090) | (14,171,282) | (10,592,693) |
| ஏரகம | 22,720,384 | (4,148,425) | 3,825,335 | 20,504,151 | 26,311,561 |

(ஆ) மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படும் 5 தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த ஓடுகள், செங்கற்கள் மற்றும் ஏனைய பொருள் அலகுகளின் எண்ணிக்கை 9,573,366 ஆன போதிலும் உள்ளபடியான உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை 3,112,050 ஆனமையால் அது மதிப்பிடப்பட்ட உற்பத்தியில் 33 சதவீதம் மாத்திரமாகும். விபரம் பின்வருமாறாகும்.

| **தொழிற்சாலை** | **மதிப்பிடப்பட்டிருந்த உற்பத்தி அலகுகள்** | **உள்ளபடியான உற்பத்தி அலகுகள்** | **குறை உற்பத்தி அலகுகள்** |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| ஏரகம | 3,544,902 | 1,515,803 | 2,029,099 |
| பிங்கிரிய | 498,600 | 150,690 | 347,910 |
| மஹியங்கனை | 1,856,700 | 593,287 | 1,263,413 |
| உஸ்வெவ | 2,148,264 | 418,989 | 1,729,275 |
| யடியன | 1,524,900 | 433,281 | 1,091,619 |
| | ------------ | ------------- | ------------- |
| கூட்டுத்தொகை | 9,573,366 | 3,112,050 | 6,461,316 |
| | ======== | ========= | ========= |

(இ) 2002 ஆம் ஆண்டின் போது மூடப்பட்டிருந்த பங்கதெனிய ஓட்டுத்தொழிற்சாலைக்கு உரித்தான இயந்திர உபகரணம் 2012 ஆம் ஆண்டின் போது கைக்கெட்டும் பெறுமதியில் விற்பனை செய்து ரூபா 7,957,298 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. தொழிற்சாலைக்கு உரித்தான காணி ரூபா 60,000 ஆன புத்தகப் பெறுமதிக்கு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சகல தொழிற்சாலைகளுக்காக உயர் மற்றும் ஆகக் குறைந்த இருப்பு நிலை எதுவும் ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,965,913 பெறுமதியான விறகு இருப்பு கூட்டுத்தாபனத்திடம் எஞ்சிக் காணப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கூட்டுத்தாபன சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஊழியர்களால் அவர்களது சேவை நீடிக்கப்பட்டிராமையாலும் நிலுவையான பணிக்கொடை தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்கு எதிராக உரிய தொழிற்சாலைகள் தொடர்பான ஊழியர்கள் நடுநிலை சபை மற்றும் நனாவித பட்டத்தில் கோவையிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 10 ஆகக் காணப்பட்டதுடன் அவை கணக்குகளில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

## 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிங்கிரிய தொழிற்சாலையில் பணியாற்றிவருகின்ற உத்தியோகத்தர்களிற்கு பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிய தினத்தில் பணிக்கொடையினை செலுத்தத் தவறியமை காரணமாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் ரூபா 57,039 தொகையான மிகைக்கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் குறித்த தினத்திற்கு ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகையைச் செலுத்துவதற்குத் தவறியதன் காரணமாக ரூபா 1,700,000 தொகையான மிகைக்கட்டணத் தொகையைக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்துவதற்கு நேர்ந்திருந்ததுடன் 2013 செப்தெம்பர் 30 வரையிலும் இது செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கணனி ஒருங்கிணைக்கப்படுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 29,000 தொகை நிறுவகத்தின் நிதி முகாமையாளரினூடாக தனியார் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தகைய ஒருங்கிணைப்பு 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.4 கூட்டுத்தாபனத்தின் நிலைத்திருப்பு

கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருப்பில் நிச்சயமற்ற தன்மை காணப்படுவது பின்வரும் காரணிகளின் மூலம் அவதானிக்கப்பட்டது.

(அ) கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் 2011 ஆம் ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் முறையே ரூபா 260,530,465 ஆகவும் ரூபா 247,380,646 ஆகவும் மறையான பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் கூட்டுத்தாபனத்தின் மொத்த சொத்துக்களுக்கு மொத்தப் பொறுப்புக்கள் விகிதம் 1:3 ஆகக் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் மொத்த ஊழியர் எண்ணிக்கை 540 பேரில் 497 ஊழியர்கள் சுயேட்சையான நட்டஈட்டை வழங்கி ஊழியர்களை ஓய்வடையச் செய்திருந்தனர்.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாகக் காணப்பட்ட 9 தொழிற்சாலைகளில் தற்போது 7 தொழிற்சாலைகள் மாத்திரம் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும் எஞ்சிய 2 தொழிற்சாலைகளும் பின்வரும் காரணங்களால் மூடப்பட்டிருந்தன.

| **தொழிற்சாலை** | **மூடப்பட்ட ஆண்டு** | **மூடப்படுவதற்கான காரணங்கள்** |
|---|---|---|
| ஒட்டிசுட்டான் | 1982 | போர் நிலைமை |
| பங்கதெனியா | 2002 | மூலப்பொருள் பற்றாக்குறை |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

கூட்டுத்தாபனத்திற்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வுக் குழு

2006 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய மீஎப்/எப்எஸ்/4(XII) ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் செயற்படாதுவிடின் அக் குழு உரியபடி தாபிக்கப்பட்டு அவை முறைப்படி கூடப்படுவதனை உறுதிப்படுத்தி அக்குழுவின் பரிந்துரைகளை அமுல்ப்படுத்துவதற்கு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அக் குழு நியமனம் தொடர்பாக கூட்டுத்தாபன முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் பாதீடு முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படுவது குறித்து கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது பொறுப்புவாய்ந்த அதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துப் பயன்பாடு
(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) பதவியணி முகாமைத்துவம்
(உ) உற்பத்தி இலக்கை எய்தல்